பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4-50

சுடர்: 6 பிரசோற்பத்தி ஞூ ஆனி மீ 04 உ செவ்வாய்க்கிழமை (18 - 6 - 1991) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர்: 195

# கூட்டரசாங்கம் நிறுவும் முயற்சியில் காங்கிரஸ்!

## பாரதீய ஜனதா தவிர்ந்த கட்சிகளின் ஆதரவைத் திரட்டுவதில் மும்முரம்

புதுடில்லி, ஜூன் 18

இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் இந்திரா காங்கிரஸ் கட்சி முன்னணி வகித்து வருகிறது. எனினும் அதற்கு அறுதிப் பெரும் பான்மை கிடைக்கத் தவறும் பட்சத்தில், பாரதிய ஜனதா தவிர்ந்த ஏனைய கட்சிகளின் ஆதரவுடன் கூட்டரசாங்கம் ஒன்றை நிறுவுவதற் கான முயற்சிகள் நேற்று இங்கு தீவிரமாக ஆரம்பமாகின.

வி. பி. சிங்கின் ஜனதா தள், மற்றும் இடதுசாரிக் கட்சிகளுடன் சேர்ந்து கூட்டரசாங்கம் ஒன்றை நிறுவ காங்கிரஸ் தலைமைப்பீடம் முயற்சிப்பதாக அறியவந்தது.

இந்திரா காங்கிரஸ் தனித்து ஆட்சி அமைப்ப தற்கு, தற்சமயம் 511 தொகுதிகளில் நடந்த தேர்தலில் ஆகக் குறைந்தது 256 தொகுதிகளிலாவது வெற்றி பெற வேண்டும்.

இன்று அதிகாலையில் 70

(4 ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரசேகர் ராஜினாமா செய்வார்!

புதுடில்லி, ஜன் 18

காபந்து பிரதமர் சந்திர சேகர் நேற்று ஜனாதிபதி வெங்கடராமனைச் சந்தித் துப் பேசினார்.

பிரதமர் பதவியை ராஜினாமாச் செய்யப்போகும் தமது விருப்பத்தை திரு. சந்திரசேகர் அப்போது ஜனாதிபதியிடம் தெரிவித்தார்.

## அ'புர தாக்குதலில் 5 படையினர் பலி!

அநுராதபுரம் மாவட்டம் கவள்கடவையில் இரு முகாம் களுக்கு இடையில் ரோந்து சென்ற படையினர்மீது நேற் றுக் காலை புலிகள் மேற் கொண்ட தாக்குதலில் 5 இராணுவத்தினர் அந்தஇடத் தில் பலியானார்கள். புலிக ளால் ஆயுதங்களும் மீட்கப் பட்டன.

புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு;-

- ★ ரி 56 - 2 ரகத் துப்பாக்கி— 2
- ★ ரி 56-1 ரகத் துப்பாக்கி — 1
- ★ இதற்குரிய மகஸின்—7
- ★ ரி 81 ரகத் துப்பாக்கி — 1
- ★ இதற்குரிய மகஸின்—4
- ★ நடுத்தர ரவைகள் — 400
- ★ ஜே. ஆர். ரகக் கைக் குண்டுகள் — 4

(உ-3)

## 18 வேங்கைகள் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 18

வவுனியாப் பகுதியில் கடந்த சில நாட்களாக ஸ்ரீலங்கா இராணுவத்தின ருடன் நடந்த மோதல்களில் விடுதலைப் புலிகள் இயக்கத் தைச் சேர்ந்த மேலும் 18 போராளிகள் வீரமரண மடைந்தனர். அவர்களின் விவரம் வருமாறு;

கப்டன் வீரன் (கணபதிப் பிள்ளை குமார் - முருங்கன்), லெப்டினன்ட் நகுலேஸ் (காளிமுத்து கந்தசாமி - புளியங் குளம்), லெப்டினன்ட் செல்வம் (தருமதாஸ் விமலதாஸ் - பருத்தித்துறை), லெப்டினன்ட் கபில் (மகேஸ்வரலிங் கம் சசிகரன் - ஏழாலை),

(4 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் தொடர்ந்து புலிகள்-படை கடும் சண்டை

கொழும்பு, ஜூன் 18

வவுனியா — மன்னார்ப் பகுதிகளில் கடந்த சில நாட் களாக விடுதலைப் புலிகளுக் கும் ஸ்ரீலங்கா இராணுவத் தினருக்கும் இடையில் கடும் சண்டை தொடர்ந்து இடம் பெற்று வருவதாக அங்கி ருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

நேற்று முன்தினம் காலை யில் குருக்கலூருக்கும் சின்னத் தம்பனைக்கும் இடையில் உள்ள பிரமணாளங்குளத் திலிருந்து படையினர் மடுப் பக்கமாக முன்னேற முயன்ற போது புலிகள் அவர்கள் மீது பெருந்தாக்குதல் ஒன்றைத் தொடுத்தனர்.

இந்தத் தாக்குதலின் போது நான்கு படையினரின் சடலங்களையும் ஆயுதங் களையும் புலிகள் கைப்பற் றினர். ஹெலி ஒன்றும் சுட்டு வீழ்த்தப்பட்டதாகத் தெரி விக்கப்பட்டது.

இந்தச் சண்டையின் போது படையினருக்கு உதவியாக இரண்டு பொம்மர்கள், இரண்டு ஹெலிகள் ஒரு அவ்ரோ ஆகியன குண்டு வீச் சுத் தாக்குதல்களை நடத் தின.

மோதலில் படையினருக்கு

[4 ஆம் பக்கம் பார்க்க]

## வெலி ஓயாவில் கண்ணி! ஐந்து படையினர் மரணம்!!

கொழும்பு, ஜூன் 18

வெலிஓயாவில் விடுதலைப் புலிகள் வைத்த சக்திவாய்ந்த நிலக்கண்ணி வெடியில் இராணுவ வாகனம் ஒன்று சிக்கிச் சிதறியது. இதனால் அந்த வாகனத்தில் பயணம் செய்த ஐந்து படையினர் கொல்லப்பட்டனர் என கொழும்பில் இராணுவ வட் டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ)

# ஈழப் போராளிகளை நாடு கடத்துவோம்!

## முதல்வராகும் வேளையில் ஜெயலலிதா அறிவிப்பு

சென்னை, ஜூன் 18

தமிழகத்தில் தங்கியுள்ள ஈழத் தமிழ்ப் போராளிகள் கைது செய்யப்பட்டு பல வந்தமாக நாடு கடத்தப்படு வர்.

— இவ்வாறு கூறியிருக்கி றார் தமிழ் நாட்டின் புதிய முதலமைச்சராகப் பதவி யேற்கவிருக்கும் செல்வி ஜெய லலிதா.

தேசிய தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித் தார்.

ராஜீவ் காந்தியின் கொலை யில் சம்பந்தப்பட்டிருக்கும் இலங்கைத் தமிழ்த் தீவிரவா திகளை ஒழித்துக் கட்டப் போவதாகவும் அவர் கூறியுள் ளார்.

அகதிகளுக்கும், போராளி களுக்கும் நிறைய வேறுபாடு

(4 ஆம் பக்கம் பார்க்க)



பத்து நாள் முத்தமிழ் விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிகள் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற போது தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், யாழ். [illegible] அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரர்ஜன், யாழ். மாவட்[illegible]த் தளபதி திரு. தினேஸ், கலை, பண்பாட்டுக் கழகத்தின் வன்னிப் பிராந்திய பொறுப் பாளர் திரு. போஜன், திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகள் அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. ரவி ஆகியோர் திறப்புரை யாற்றுவதையும் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் [illegible] [illegible]துரை தலைமையுரை ஆற்றுவதையும் படங்களில் காணலாம்.

(அ-5)

(படங்கள்: கே. எஸ். ஆர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்கம் – 02 18/06/1991

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

தேங்காய்ச் சிரட்டைகள் தொகையாக தேவை. தொடர்பு கொள்ளவும். ஆர். வி. ஜி. பீடி ஸ்தாபனம், 58, குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம்.

(17203)

### வகுப்புகள்

உதவி ஆங்கில ஆசிரியருக்கான இலக்கண வகுப்புகள் 19 – 6 – 1991 இல் நடைபெற உள்ளன. By B. Manjula 21/2, அம்மன் வீதி கந்தர் மடம், யாழ்ப்பாணம்.

(17101)

### தவறிவிட்டது

காசோலை இல: 1HZO 48326 வே. சேதுகாவலர், வீரமாகாளி அம்மன் கோவிலடியில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

(17104)

### காணவில்லை

வெள்ளையும், கறுப்பும் நிறமுள்ள சின்னக் கொம்பு ஜேர்சி இன பசு சென்ற வியாழக்கிழமை மத்தியானத்தில் இருந்து காணாமற்போய் விட்டது. இது பற்றிய தகவலை தெரிவிப்பவர்களுக்கு தகுந்த சன்மானம் வழங்கப்படும். ரெட்ணர் சுபே, 720, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

(17208)

### PERSONAL CLASSES ENGLISH

1992 ஆம் ஆண்டுக்கான G.C.E A/L English Literature, G C E. O/L English Literature (Optional Subject) ஆகிய வகுப்புகள் நடைபெறுகின்றன. புதிய பிரிவுகள் 26 - 06 – 91 ஆரம்பமாக உள்ளன. வ. கோவிந்தபிள்ளை, 62, பழம் றோட், சந்தர்மடம்.

(17207)

### PERSONAL CLASSES MATHS [கணிதம்]

G. C E - 90 (August) துரித மீட்டல்பயிற்சி மற்றும் G. C. E-91, ஆண்டுகள் 6, 7, 8, 9, 10ஆம் வகுப்பு மாணவர்களுக்கு கணிதம் கற்பிப்பதில் நீண்டகால அனுபவமுள்ள ஆசிரியரினால் வகுப்புகள் நடத்தப்படுகின்றன. சித்திக்கு உத்தரவாதம் அளிக்கப்படும். விவரங்களுக்கு Kandiah Pararasasekaram, 8D, Flechers Lane, Chundikuli.

[17175]

# லொறி புரண்டு ஒருவர் மரணம்

யாழ்ப்பாணம், ஜூன், 18 பாரத்துடன் வந்த லொறி குடைசாய்ந்ததில் ஒருவர் அதே இடத்தில் உயிரிழந்தார். சாரதி உட்பட நால்வர் காயமடைந்தனர்.

நேற்று முன்தினமிரவு 11-00 மணி அளவில் கோப்பாய் — கைதடிப் பாலத்தில் இந்த விபத்து நிகழ்ந்தது.

மீசாலையைச் சேர்ந்த குலராசசிங்கம் சாந்தன் (வயது 21) என்பவரே உயிர் இழந்தவராவர்.

மற்றும் மீசாலையைச் சேர்ந்த பாலசுந்தரம் தனபால்சிங்கம் (வயது 35), செல்லையா விஜயகுமாரன் (வயது 27), கனகசபாபதி புலேந்திரன் (வயது 34), சாவகச்சேரியைச் சேர்ந்த இரத்தினசிங்கம் கனகரத்தினம் (வயது 46) சாரதி ஆகியோர் காயம் அடைந்தனர்.

(இ-72-15)

# சித்திரைப் பெருவிழாவாக இனி தமிழ்விழா மிளிரும்!

யாழ்ப்பாணம், ஜூன் 18 முத்தமிழ் விழா எதிர்காலத்தில் ஆண்டு தோறும் சித்திரைப் பெருவிழாவாக பத்து நாட்கள் நடத்தப்படும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகம் வெளியிட்டுள்ள முத்தமிழ்விழா பிரகடனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முத்தமிழ் விழாவின் இறுதி நாள் நிகழ்ச்சியில் முத்தமிழ் விழா பிரகடனத்தை விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் கவிஞர் புதுவை இரத்தினதுரை வாசித்தார்.

அந்தப் பிரகடனத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள விடயங்களில் சில வருமாறு:–

★ ஓரரசு தனது நாட்டுக் கலைஞர்கள், எழுத்தாளர்களுக்கு எந்தெந்த வகையில் ஊக்கமும் உதவியும் செய்ய வேண்டுமோ அவற்றையெல்லாம் எமது இயக்கமும் செய்யும்.

★ தமிழீழ எழுத்தாளர்கள், கலைஞர்களது ஆக்கங்களை வெளிக்கொணரும் முகமாக விரைவில் ஓர் இலக்கிய இதழ் வெளியிடப்படும்.

★ பல்கலைக்கழக மட்டத்தில் தமிழ் மொழியைத் தாய்மைப்படுத்தவென ஒரு தனித்துறை தோற்றுவிக்கப்பட்டு செயற்படுத்தப்படும். [ஓ-5]

## மாபெரும் இசை மாலை நிகழ்ச்சி

(இடம்பெயர்ந்தோர் வீடமைப்பு நிதிக்காக சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நடாத்துகிறது.)

இடம்: சாவகச்சேரி இந்துக் கல்லூரி மைதானம்

காலம்: 22-06-91 சனிக்கிழமை மாலை 6. 00 மணிக்கு

**நிகழ்ச்சிகள்:**

★ இந்த மண் எங்களின் சொந்தமண் புகழ்

**சாந்தன் இசைக் குழுவின் இன்னிசை நிகழ்ச்சி**

★ விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் வழங்கும்

**"களத்தில் காத்தான்"**

**பிரவேசம்: 100/–, 10/– மாணவர்களுக்கு 5/– மட்டும்**

(சீ/0112)

# மரண அறிவித்தல்கள்

## K. N. நிக்கலஸ் (நடராசா)

(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த K. N. நிக்கலஸ் அவர்கள் கொழும்பில் காலமாகிவிட்டார். அன்னார் அளவெட்டியைச் சேர்ந்த காலஞ்சென்ற கார்த்திகேசு செல்வபாக்கியம் தம்பதிகளின் மகனும், மேரிஜேட்ரூட்டின் (புஷ்பம்) (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். கன்னியர்மடம்), அன்புக் கணவரும், டாக்டர் ரூபக்குமார் (லண்டன்), சுகுனா (அவுஸ்திரேலியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஊஷா (லண்டன்), ஜெயரட்ணம் (அவுஸ்திரேலியா), ஆகியோரின் மாமனாரும், எமா, சோயி, சுஜேஷன், சுஜேனி ஆகியோரின் அன்புப் பேரனும், மனோன்மணி பாவிலுப்பிள்ளை, வனிதா மகேஸ்வரன், காலஞ்சென்ற அரசரட்ணம், இராசரட்ணம், காலஞ்சென்ற நித்தியானந்தராஜா, லில்லி பரமேஸ்வரி ஆகியோரின் சகோதரனும், மேரிதிரேசா, மனுவேற்பிள்ளை, காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (இளைப்பாறிய பிரதம தபாலதிபர்), சற்குணம் செல்வநாயகம் (இளைப்பாறிய ஆசிரியை, ஜோன் பொஸ்கோ) செல்வராணி பாலசிங்கம் (ஆசிரியை, ஜோன் பொஸ்கோ), பெனடிக்ற் ஜெயரட்ணம் (புகையிரதப் பகுதி) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிச் சடங்குகள் 19, சிறிபால வீதி, கல்கிசையில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்
**ஞா. எட்றியன்**

265, ஆஸ்பத்திரி வீதி,
சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

(17213)

## செல்வன் பிறின்ஸ் ஸ்ரெரன் றோகேந்திரன்

(நோவாஸ் அந்தியகால சேவை நிர்வாகஸ்தர், மட்டக்களப்பு)

அச்சுவேலி தென்மூலையைச் சேர்ந்த திரு. வீரசிங்கம் பிறின்ஸ் ஒஸ்கார், திருமதி மற்றில்டா மனோன்மணி அவர்களின் அன்பு மூத்த மகன் ஸ்ரெரன் றோகேந்திரன் 30—5—91இல் மட்டக்களப்பில் அகால மரணமடைந்துவிட்டார். இவர் பிறின்ஸ் தயானின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்ற மாட்டீன் வீரசிங்கம், திரு. வீரசிங்கம் மவுண்ட் பட்டன் [நோவாஸ் அந்தியகாலசேவை உரிமையாளர், மட்டக்களப்பு], மரியம்மா பிரான்சிஸ் (ராணி) ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற றீட்டர் மகேந்திரன், திரேசா ஜோர்ஜ், காலஞ்சென்ற ஜோசேப்பின் வீரசிங்கம், தோமஸ் இராசரத்தினம், தோமஸ் வின்சன்ட், தோமஸ் துரைசிங்கம், தோமஸ் ஜெறோம் ஆகியோரின் மருமகனும் ஆவார், இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தென்மூலை,
அச்சுவேலி.

தகவல்:
பிறின்ஸ் ஒஸ்கார்
[தந்தை]

[17211]

## சென். ஜோன்ஸ் கல்லூரி

யாழ்ப்பாணம்

1. க.பொ.த (உயர்தர) வகுப்பு – தாவரவியல்
2. க.பொ.த (உயர்தர) வகுப்பு – கணிதம்

ஆகிய பாடங்கள் கற்பிப்பதற்கு பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தகைமையுடையோர் தங்களது கல்வித்தகைமைச் சான்றிதழ்களுடன் 22 – 06 – 1991 க்கு முன் நேரடியாக அதிபர் காரியாலயத்தில் காலை 9.00 மணிக்கும், பிற்பகல் 3.30 மணிக்கும் இடையில் அதிபரைச் சந்திக்கவும்.

– அதிபர்.

[சி-0121]

## உடுவில் மகளிர் கல்லூரி இன்ரறக் கழகம்

உடுவில் மகளிர் கல்லூரி இன்ரறக் கழகத்தில் 31-05-1991 இல் நடைபெற இருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணங்களினால் 28-06-1991 இற்கு பிற்போடப்பட்டுள்ளது.

– அதிபர்.
உடுவில் மகளிர் கல்லூரி.

[17210]

## ஓராண்டு நினைவஞ்சலி



மலர்வு: 1926 — 08 — 15

உதிர்வு: 1990 — 06 — 29

### அமரர் ந. சிவசிதம்பரம்

[ஓய்வுபெற்ற விவசாய உத்தியோகத்தர்]

எம்மை எல்லாம் அன்புடனும், பண்புடனும் பாசத்துடனும் வாழ வைத்த தெய்வமே! உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

**அன்பு மனைவி, பிள்ளைகள், சகோதரர்கள், மருமகன், பேரப்பிள்ளைகள், மைத்துனர், உறவினர்.**

ஆஸ்பத்திரி வீதி,
சங்கானை.

[17093]

## 12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு: 15 - 11 - 1923

இறப்பு: 1 - 7 - 1979

திதி: 18 - 6 - 1991

### அமரர் S. P. குருசாமி

(பொலீஸ் இன்ஸ்பெக்டர்)

இவருடைய ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

மனைவி, மகள், பேரப்பிள்ளைகள் ரமேஸ் (London), பிரகாஷ் (Swizerland), ஆகாஷ், பிரதீஸ், சபேஸ்.

204, மானிப்பாய் வீதி,
ஓட்டுமடம்,
யாழ்ப்பாணம்.

(4153)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18/06/1991

பக்கம்-03

# உதயன்

## கொழுக்கட்டையும் மோதகமும்!

தமிழகத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற சட்ட சபைத் தேர்தலில் அனைத்து இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக-இந்திரா காங்கிரஸ் கூட்டணி அமோக வெற்றி பெற்றுள்ளது. இந்திரா காங்கிரஸின் ஆதரவின்றியே தனித்து ஆட்சி நடத்தக்கூடிய பலத்தை செல்வி ஜெயலலிதா தலைமையிலான அ. இ. அ. தி. மு, கழகத்திற்குத் தமிழக மக்கள் வழங்கியுள்ளார்கள்.

தமிழக மக்கள் அ. தி. மு. கவுக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்து ஆட்சி மாற்றம் கொண்டுவந்திருப்பது தி. மு. கவின் சேவையில் மக்கள் குறைகண்டுள்ளார்கள்; அல்லது குறை இருப்பதாக நம்ப வைக்கப்பட்டுள்ளார்கள் என்பதையே எடுத்தியம்பி நிற்கிறது.

கருணாநிதி அரசு ஈழத் தமிழர் அபிலாசைகளுக்கு ஆதரவாகச் செயற்படுவதாக எதிரணியினர் குறைகூறி, குற்றஞ்சாட்டி வந்தது உண்டு. ஆனால் அந்த அளவுக்கு கருணாநிதி ஈழத் தமிழர் போராட்டத்துக்குப் பெரிதாக உதவினாரா என்றால், இல்லை! ஈழத் தமிழர் விவகாரத்தைக் கையில் எடுத்து அதனை வைத்துக்கொண்டு தமது அரசியல் ஆதரவைப் பெருக்கவும், வாக்கு வங்கியைப் பலப்படுத்தவுமே பயன்படுத்தினார் என்பதே உண்மை. அந்த வகையில் கருணாநிதி ஈழத் தமிழருக்கு ஆதரவாகக் காட்டிக்கொண்டாரே அன்றி செயலளவில் எதனையும் ஆக்க பூர்வமாகச் செய்யவில்லை என்பதே உண்மை.

வி.பி.சிங் பிரதமராக இருந்த சந்தர்ப்பத்தைக் கூட, ஈழத் தமிழருக்கு உதவுவதற்குக் கருணாநிதி தக்கவாறு பயன்படுத்தவில்லை. பின்னர், விடுதலைப் புலிகளுக்கு உதவுவதாகக் குற்றஞ்சாட்டி தம்மீது அழுத்தம் போடப்பட்டபோது, கருணாநிதி தாமும், தமது உறுப்பினர்களும் ராஜினாமாச் செய்து அப்போதே தேர்தல் ஒன்றுக்கு வழிவகுத்திருக்கலாம். அப்படி ஒரு தேர்தல் நடந்திருந்தால் கருணாநிதி பெரு வெற்றி பெற்று அப்போதே மீண்டும் ஆட்சி அமைத்திருக்கலாம்.

அதனையும் அவர் செய்யவில்லை என்பதால், கருணாநிதியும் ஈழத் தமிழர் விவகாரத்தில் வாழப்பாடி இராமமூர்த்தி, ஜெயலலிதா, ராஜீவ் காந்தி ஆகியோர் வரிசையில் வைக்கப்பட வேண்டியவரே. அதாவது இவர்கள் எல்லோருமே ஈழத் தமிழர் விவகாரத்தைத் தமது அரசியல் லாபத்துக்குப் பயன்படுத்தும் அணியினரே!

எனவே ஈழத்தமிழருக்கு கருணாநிதியின் தி. மு. க. தோற்றதால் நட்டம் என்றோ, ஜெயலலிதா வென்றதால் நட்டம் அல்லது நன்மை என்றோ இல்லை. அது கொழுக்கட்டை என்றால் இது மோதகம்; அவ்வளவு தான்! மத்திய அரசுகளைச் சந்தோசப்படுத்த நினைக்கும் அரசுகள் தமிழகத்தில் இருக்கும் வரை ஈழத் தமிழர் தமிழகத்தின் உதவியையோ ஆதரவையோ பெற முடியாது என்பதே யதார்த்தம்.

ஈழத் தமிழருக்கு உதவுவதற்கு ஒரு புதிய தலைமை அங்கு தோன்ற வேண்டும். தமிழ் இன உணர்வும், எழுச்சியும் மிக்க புரட்சித் தலைமை உதயமாக வேண்டும். தி.மு.க. வுக்கு ஏற்பட்ட தோல்வி என்னும் பாடம் அத்தகைய தலைமையைத் தோற்றுவிக்கக் கூடும். யார் அறிவார்?!

# தமிழக சட்டசபை வெற்றி - தோல்விகள்

சென்னை, ஜூன் 18

தமிழக சட்டசபைத் தேர்தலில் இடம்பெற்ற முக்கிய வெற்றி - தோல்விகள் சில வருமாறு;

### பாண்டியன் தோல்வி

சேரன்மாதேவி தொகுதியில் தி.மு.க. ஆதரவுடன் போட்டியிட்ட முன்னாள் சபாநாயகர் பி. எச். பாண்டியன் அ.தி.மு.க. வேட்பாளரிடம் தோற்றுப்போனார். 1980ஆம் ஆண்டில் இருந்து அத்தொகுதியின் உறுப்பினராக திரு. பாண்டியன் இருந்து வந்தார்.

### திருநாவுக்கரசு வெற்றி

ஜெயலலிதாவுடன் கருத்து வேறுபாடு கொண்டு அ.தி.மு.க. வில் இருந்து பிரிந்து அண்ணா-புரட்சித்தலைவர் தமிழ் முன்னேற்றக் கழகத்தை அமைத்துப் போட்டியிட்ட முன்னாள் அமைச்சர் திருநாவுக்கரசு அறந்தாங்கித் தொகுதியில் அ.தி.மு.க. வேட்பாளரை 21, 421 வாக்குகள் வித்திபாசத்தில் தோற்கடித்து வெற்றியீட்டினார்.

### சாத்துாரார் வெற்றி பெற்றார்

சாத்தூர் தொகுதியில் திருநாவுக்கரசு தலைமையிலான அ. தி. மு. க. பிரிவின் சார்பில் — தி. மு. கவின் தோழமையுடன் — போட்டியிட்ட கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் (சாத்தூர் இராமச்சந்திரன்) 2 ஆயிரத்து 239 வாக்குகள் அதிகப்படியாகப் பெற்று வெற்றி பெற்றார். அவருக்கு கிடைத்த வாக்குகள் 59 ஆயிரத்து 942.

### தாமரைக்கனிக்கு வெற்றிக்கனி

சுயேச்சை வேட்பாளராகப் போட்டியிட்ட தாமரைக்கனி, அ. தி. மு. க. வேட்பாளரைத் தோற்கடித்து வெற்றி பெற்றார். இவர் முன்னர் அ. தி. மு. கவின் எம். எல். ஏயாக இருந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பண்ருட்டியில் இராமச்சந்திரன்

முன்னாள் மாநில அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன், பண்ருட்டித் தொகுதியில் பாட்டாளி மக்கள் கட்சி வேட்பாளராகப் போட்டியிட்டு 1122 வாக்குகள் வித்தியாசத்தில் அ. தி. மு. கவை தோற்கடித்து, வெற்றி பெற்றார். தி. மு. க. வேட்பாளரால் மூன்றாவது இடத்தையே பெற முடிந்தது.

பண்ருட்டி இராமச்சந்திரன் 1980, 1984 தேர்தல்களில் அ. தி. மு. க. வேட்பாளராக போட்டியிட்டு வெற்றி பெற்றிருந்தார். 1989 தேர்தலில் இவர் போட்டியிடவில்லை.

(இ-எ)

### மரகதம் சந்திரசேகர் வெற்றி

★ முன்னாள் மத்திய அமைச்சர் திருமதி மரகதம் சந்திரசேகர் (இந்திரா காங்கிரஸ்) ஸ்ரீபெரும்புதூர் தொகுதியில் வெற்றி பெற்றார்.

முன்னாள் தி. மு. க. அமைச்சர் திரு. சுந்தரத்தை விட ஒரு லட்சத்து 80 ஆயிரம் வாக்குகளை அவர் மேலதிகமாகப் பெற்றார்.

(இ)

# பண்டாரி, ஹெக்டே தோல்வி

புதுடில்லி ஜூன் 18

இந்தியா நாடாளுமன்றத் தேர்தலில் இடம்பெற்ற சில முக்கிய வெற்றி தோல்விகள் வருமாறு:

★ மறைந்த ராஜீவ் காந்தியின் பால்ய நண்பரும், ராஜீவ் பிரதமராக இருந்த காலத்தில் அவருக்கு பேச்சுகளைத் தயாரித்துக் கொடுத்து வந்தவருமான திருமணி சங்கர் ஐயர் தமிழ்நாடு-மயிலாடுதுறை நாடாளுமன்றத் தொகுதியில் ஒரு லட்சத்து 61 ஆயிரத்து 929 வாக்குகளால் தி. மு. க. வேட்பாளரைத் தோற்கடித்து, முதல் தடவையாக நாடாளுமன்றம் செல்கிறார். அவருடன் போட்டியிட்ட முஸ்லிம் லீக் தலைவர் அப்துல் சமதுக்கு 37 ஆயிரத்து 677 வாக்குக்களே கிடைத்தன.

★ சந்திரசேகர் அமைச்சரவையில் வெளியுறவு அமைச்சராகப் பதவி வகித்த திரு. வித்யாசரண் சுக்லா, இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக மத்திய பிரதேசத்தில் போட்டியிட்டு நாடாளுமன்றத்திற்கு சுமார் 900 பெரும்பான்மை வாக்குகளால் வெற்றி பெற்றார்.

★ காந்திஜியின் பேரரான ராஜ்மோகன் காந்தி குஜராத் மாநிலத்தில் இம்முறை போட்டியிட்டு தோல்வி அடைந்தார். இவர் 1989 தேர்தலில் அமேதி நாடாளுமன்றத் தொகுதியில் போட்டியிட்டு மறைந்த ராஜீவ் காந்தியிடம் தோல்வி அடைந்தார் என்பது தெரிந்ததே.

இம்முறை ராஜ்மோகன் காந்திக்குக் கட்டுப்பணமும் கிடைக்கவில்லை.

★ புதுடில்லி தெற்கு நாடாளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட முன்னாள் இந்திய வெளியுறவுச் செயலாளர் ரொமேஷ் பண்டாரி பாரதீய ஜனதா வேட்பாளரிடம் தோல்வி அடைந்தார்.

★ கர்நாடக மாநிலத்தில் இருந்து ஜனதா தள் வேட்பாளராக போட்டியிட்ட முன்னாள் முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே காங்கிரஸ் வேட்பாளரிடம் தோல்வி அடைந்தார்.

★ தி. மு. க. அமைச்சராக இருந்தவரான திரு. கே. பி. கந்தசாமி திருநெல்வேலி நாடாளுமன்றத் தொகுதியில் அ. தி. மு. க. வேட்பாளரிடம் ஒரு லட்சத்து 53 ஆயிரத்து 592 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்றுப்போனார்.

(இ-எ)

# பாரதீய ஜனதா ஏமாற்றம்

புதுடில்லி, ஜூன் 18

தேர்தல் முடிவுகள் குறித்து பாரதீய ஜனதாக் கட்சி தனது ஏமாற்றத்தைத் தெரிவித்துள்ளது.

முடிவுகள் இப்படி அமையும் என்று தாம் எதிர்பார்க்கவில்லை என்று அக்கட்சி தெரிவித்ததாக வெரித்தாஸ் கூறியது.

(இ-எ)

# ரகசிய வாக்கெடுப்பு மூலம் புதிய பிரதமர் தெரிவு

புதுடில்லி, ஜூன் 18

புதிதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ள இந்திரா காங்கிரஸ் எம். பிக்கள் [illegible] புதிய தலைவரை இரகசிய வாக்கெடுப்பு மூலம் தெரிவு செய்யவிருக்கின்றனர் என்று பி. பி. சியின் புதுடில்லிச் செய்தியாளர் மார்க் டலி [illegible] அறிவித்தார். நாடாளுமன்றக் குழுத்

[4 ஆம் பக்கம் பார்க்க]

# இரு தொகுதிகளிலும் ஜெயலலிதா வெற்றி வாகை!

சென்னை, ஜூன் 18

தாம் போட்டியிட்ட இரு தொகுதிகளிலும் அ. தி. மு. க. பொதுச் செயலாளர் செல்வி ஜெயலலிதா வெற்றி வாகை சூடினார்.

தர்மபுரி மாவட்டம் - பர்கூர் தொகுதியில் 37 ஆயிரத்து 225 பெரும்பான்மை வாக்குகளால் அவர் வெற்றியீட்டினார்.

இரண்டாவது இடத்தை தாயக மறுமலர்ச்சிக் கழக வேட்பாளராக போட்டியிட்ட திரைப்பட டைரக்டர் டி. ராஜேந்தர் பெற்றார்.

இத்தொகுதியில் தி. மு. க. வேட்பாளர் உட்பட 15 வேட்பாளர்கள் கட்டுப்பணத்தை இழந்தனர்.

ஜெயலலிதா தாம் போட்டியிட்ட காங்கேயம் தொகுதியில் 69 ஆயிரத்து 50 பெரும்



பான்மை வாக்குகளால் தி. மு. க. வேட்பாளர் ராஜ்குமார் மன்றாடியாரை தோற்கடித்தார். (இ)

## வாழப்பாடிக்கு அதிகப்படி



★ தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் வாழப்பாடி இராமமூர்த்தி கிருஷ்ணகிரி நாடாளுமன்றத் தொகுதியில் ஜனதா தள் வேட்பாளரை 2 லட்சத்து 3 ஆயிரத்து 114 வாக்குகளால் தோற்கடித்தார்.

## சிங் வென்றார்!



முன்னாள் பிரதமரும் ஜனதாதள் தலைவருமான திரு. வி. பி. சிங் பாரதீய ஜனதா வேட்பாளரை 79 ஆயிரத்து 94 வாக்குகள் வித்தியாசத்தில் தோற்கடித்தார். அத்தொகுதியில் இந்திரா காங்கிரஸ் வேட்பாளர் மூன்றாவதாக வந்தார்.

எனினும் பாரதீய ஜனதா வேட்பாளர் தெரிவித்த ஆட்சேபத்தை அடுத்து இத்தேர்தல் முடிவு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்படுவது ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறது.

(உ-எ)

## மீண்டும் சிதம்பரம்



சென்னை, ஜூன் 18

இந்திரா காங்கிரஸைச் சேர்ந்த முன்னாள் மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் சிவகாசி நாடாளுமன்றத் தொகுதியில் 2 லட்சத்து 28 ஆயிரம் பெரும்பான்மை வாக்குகளால் மீண்டும் வெற்றியீட்டினார்.

## தேவிலால் வீழ்ந்தார்



ஹரியானா மாநிலம் - ரோகர் நாடாளுமன்றத் தொகுதியில் சமாஜவாதி ஜனதாதள் வேட்பாளராக போட்டியிட்ட துணைப் பிரதமர் தேவிலால் இந்திரா காங்கிரஸ் வேட்பாளரிடம் தோற்றுப் போனார்.

திரு. தேவிலால் ஹரியானா சட்டசபைத் தொகுதி ஒன்றிலும் ஏற்கனவே தோல்வி அடைந்திருந்தார்.

(இ-எ)

## அத்வானி வென்றார்



★ புதுடில்லியில் உள்ள ஏழு நாடாளுமன்றத் தொகுதிகளில் ஒன்றில் காங்கிரஸ் வேட்பாளராகப் போட்டியிட்ட பிரபல இந்தி நடிகர் ராஜேஷ்கன்னா, பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் எல். கே. அத்வானியிடம் 1500 வாக்குகளால் தோற்றுப் போனார்.

திரு. அத்வானி குஜராத் மாநிலம் - காந்தி நகரிலும் வெற்றி பெற்றார்.

## ராஜீவ் காந்தி வென்றதாக அறிவிப்பு

உத்தரப்பிரதேசம் அமேதி நாடாளுமன்றத் தேர்தல் தொகுதியில் மறைந்த ராஜீவ் காந்தி ஒரு லட்சத்து 23 ஆயிரத்து 272 வாக்குகள் வித்தியாசத்தில் பாரதீய ஜனதா வேட்பாளரைத் தோற்கடித்தார் என்று அறிவிக்கப்பட்டது. (உ)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# படை ஆக்கிரமிப்பை எதிர்த்து பேரணிகள்

யாழ்ப்பாணம்- ஜூன் 18
தமிழ் மண்ணில் சிறீலங்கா இராணுவம் ஆக்கிரமித்துள்ளதை எதிர்த்தும்—

பொருளாதாரத் தடை, நிவாரண நிறுத்தம் ஆகியனவற்றை ஆட்சேபித்தும்—

குடாநாட்டின் பல பகுதிகளிலும் எழுச்சிப் பேரணிகள் நடத்தப்படவுள்ளன.

இந்த எழுச்சிப் பேரணி வரிசையில் நாளை புதன் கிழமை கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இருந்து ஒரு பேரணி ஆரம்பமாகும். காலை ஒன்பது மணிக்குத் தொடங்கும் பிரஸ்தாப பேரணி யாழ் நகர் றக்கா வீதிக்கு வந்து சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்க அலுவலகத்தில் மகஜர் ஒன்றைக் கையளிக்கும்.

இந்தப் பேரணியில் பொது மககள், அரச ஊழியர்கள், தொழிலாளர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொள்வர்.

### தெல்லிப்பழையில்

இதேபோன்ற பேரணியை வலிகாமம் மக்களும் நாளை நடத்துகின்றனர். அந்தப் பேரணி காலை எட்டு மணிக்கு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் கோவிலில் இருந்து புறப்பட்டு யாழ். செயலகத்தை வந்தடையும்.

### மீசாலையில்

இதேவேளை உலர் உணவு விநியோக நிறுத்தத்தை ஆட்சேபித்து மீசாலையிலும் ஆட்சேபப் பேரணி நாளை புதன் கிழமை நடைபெறவுள்ளது.

மீசாலைச் சந்தியில் ஆரம்பிக்கும் பிரஸ்தாப ஊர்வலம் மீசாலையிலிருந்து கண்டி வீதி வழியாக சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைச் சென்றடையும். அங்கு மகஜரும் கையளிக்கப்படும். (அ-117)

## தேர்த் திருவிழாக்கள்

யாழ்ப்பாணம், ஜூன் 18
நாளை புதன்கிழமை ஆனி உத்தர தினமாகும். அதனையொட்டி குடாநாட்டில் உள்ள பல சிவாலயங்களில் நடராசர் அபிஷேகம் - ஆருத்ராதரிசனம் -சிறப்பாக நடைபெறவுள்ளது. அன்று வருடாந்த மகோற்சவத்தின் தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

இன்று செவ்வாய்க்கிழமை நல்லூர் கைலாச பிள்ளையார் கோவில் சிவனுக்குத் தேர்த்திருவிழா காலை 9-00 மணிக்கு நடைபெறுகிறது

வட்டுக்கோட்டை கண்ணலிங்கேஸ்வரர் ஆலய தேர்த் திருவிழா இன்று பிற்பகல் இரண்டு மணிக்கும், வட்டுக் கோட்டை காசி விசுவநாத சிவன் கோவில் தேர்த்திருவிழா இன்று காலை 9-00 மணிக்கும் நடைபெறும். (அ)

## இன்றைய கருத்தரங்கு

யாழ்ப்பர்ணம், ஜூன் 18
'வடமாகாண எதிர்கால அபிவிருத்தியில் இயற்கை வளங்களின் பங்களிப்பு'' எனும் தலைப்பிலான கருத்தரங்கு இன்று புதன்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு புவியியற்றுறை | விரிவுரை மண்டபத்தில் நடைபெறும்.

பொறியியற்றுறை பேராசிரியர் வி. நவரத்தினராஜா கருத்துரை வழங்குவார். (இ)

## ஈழப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கள் உள்ளன.

அடைக்கலம் தேடி வந்த ஈழத் தமிழ் அகதிகளுக்கு என்றும் போல் உதவுவோம்; ஆதரவு கொடுப்போம்; புது வாழ்வு அளிப்போம்.

ஆனால் தி. மு. க ஆட்சியில் பேராளிகள் சுதந்திரமாக தேசவிரோத நடவடிக்கைகளில் ஈடுபட்டது போல எமது ஆட்சியில் செயற்பட விடமாட்டோம்.

உலகத் தமிழரை தமிழகம் என்றும் வரவேற்கும். தமிழகத்தைத் தாய் வீடாகக் கருதி சகல உரிமைகளையும், சலுகைகளையும் தமிழக அரசிடமிருந்து உலகத் தமிழர் எதிர் பார்க்கலாம்.

உலகின் எந்தப் பகுதியில் தமிழருக்கு அநீதி இழைக்கப் பட்டாலும் அதைப் பார்த்துக் கொண்டு எமது அரசு வெறுமனே இராது.

—இவ்வாறு அவர் மேலும் சொன்னார். [உ-எ-த]

## வவுனியா...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பாரிய இழப்பு ஏற்பட்டிருக்கும் என்றும் தெரிவிக்கப் பட்டது.

மோதலில் புலிகளால் கைப்பற்றப் பட்ட ஆயுதங்களின் விவரம் வருமாறு:-

★ ரி 56 - 2ரகத் துப்பாக்கி- 1
★ 203 ரக கைத்துப்பாக்கி -1
★ அதற்குரிய மகஸின் - 6
★ ரி-56- 1 ரகத் துப்பாக்கி-1

இதற்கிடையில் வவுனியா மோதலில் 23 இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் என்றும்-

60 பேர் படுகாயமடைந்தனர் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-எ-3-15)

## ஆனையிறவில் வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜூன் 18
ஆனையிறவு முகாம் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நேற்று முன்தினம் காலை மோதல் இடம்பெற்றது. இந்த மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான விக்கி (தியாகராசா உதயராசா — கிளிநொச்சி) வீரமரணமடைந்தார்.

## வெறிச்சோடியது

சென்னையில் உள்ள தி. மு. க. தலைமையகமான ''அறிவாலயம்'' கட்டடம் நேற்று வெறிச்சோடிக் காணப்பட்டதாக சென்னைச் செய்திகள் தெரிவித்தன,

## ராஜினாமா

கேரள மாநில முதலமைச்சர் ஈ. கே. நாயனார் நேற்று தனது இராஜினாமாவைச் சமர்ப்பித்தார்.

மாநில சட்டசபைத் தேர்தலில் அவரது ஆளும் இடதுசாரி ஐக்கிய முன்னணி தோல்வி அடைந்தது தெரிந்ததே.

## கூட்டரசாங்கம்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வீதமான தொகுதிகளின் முடிவுகள் அறிவிக்கப்பட்ட வேளையில் வெளியிடப்பட்ட கணிப்புகளின்படி இ. காங்கிரஸ் மொத்தம் 225 முதல் 230 தொகுதிகள் வரை வெற்றியீட்டும் எனத் தெரிவிக்கப்பட்டது.

230 தொகுதிகளில் வெற்றியீட்டினாலும் — அ.தி.மு.க. போன்ற தோழமைக் கட்சிகளின் ஆதரவைப் பெற்றும் கூட — காங்கிரஸ் கட்சி ஆட்சியமைக்க முடியாது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனால் பாரதீய ஜனதாக் கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளின் ஆதரவைப் பெற்று ஆட்சியமைக்கும் முயற்சியில் காங்கிரஸ் தலைவர்கள் சிலர் நேற்றிரவு மும்முரமாக ஈடுபட்டிருந்ததாகத் தெரிவிக்கப் படுகிறது.

இதனை காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளர்களில் ஒருவரான திரு. பல்ராம் ஜாக்கர் உறுதிப்படுத்தினார்.

கூட்டரசாங்கம் ஒன்றை அமைக்க இந்திரா காங்கிரஸ் கட்சிக்கு ஆதரவு வழங்கும் தங்கள் விருப்பத்தை தேசிய முன்னணித் தலைவர்கள் சிலர் பகிரங்கமாக வெளியிட ஆரம்பித்திருக்கின்றனர் என்று பி. பி. ஸி. நேற்று இரவு அறிவித்தது.

இந்திரா காங்கிரஸ் கட்சி அரசு அமைப்பதற்கு உதவப் போவதாக மார்க்ஸீய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் சுர்ஜித்சிங் நேற்று பகிரங்கமாக அறிவித்தார். (உ-எ)

## இரகசிய...

[3 ஆம் பக்கத் தொடர்ச்சி]
தலைவரே புதிய பிரதமராகப் பதவி ஏற்பார் என்பது தெரிந்ததே.

பிரதமர் பதவிக்கு மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் சரத்பவார் கட்சியின் தற்போதைய தலைவர் பி. வி. [illegible] தொடங்கியுள்ளன. (உ-எ)

## லோகசபை முடிவுகள்

இன்று அதிகாலை வரை அறிவிக்கப்பட்ட இந்திய லோகசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| மொத்தத் தொகுதிகள் | — 543 |
| தேர்தல் நடந்தவை | — 511 |
| முடிவுகள் வெளியானவை | — 351 |
| ★ இந்திரா காங்கிரஸ் | — 187 |
| ★ பாரதீய ஜனதா கட்சி | — 74 |
| ★ ஜனதா தள் | — 22 |
| ★ மார்க்ஸிய கம்யூனிஸ்ட் | — 22 |
| ★ இந்திய கம்யூனிஸ்ட் | — 04 |
| ★ அ. இ. அ. தி. மு. க | — 11 |
| ★ தெலுங்கு தேசம் | — 09 |
| ★ ஜன்மோர்ச்சா | — 05 |
| ★ சிவசேனா | — 03 |
| ★ இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக் | — 02 |
| ★ ஆர். எஸ். பி | — 02 |
| ★ காங்கிரஸ் (எஸ்) | — 01 |
| ★ ஜனதா தள் [ஜி] | — 01 |
| ★ பி.எஸ்.பி. | — 01 |
| ★ சுயேச்சை | — 07 |

## தமிழ்நாடு சட்டசபை இறுதி முடிவுகள்

தமிழகசட்டசபைத் தேர்தல் முடிவுகள் வருமாறு:-

| | |
|---|---|
| மொத்த தொகுதிகள் | — 234 |
| தேர்தல் நடந்தவை | — 232 |
| வெளியான முடிவுகள் | — 232 |
| ★ அ. தி. மு. க | — 163 |
| ★ இ. காங்கிரஸ் | — 61 |
| ★ திருநாவுக்கரசு தலைமையிலான அண்ணா, புரட்சித் தலைவர் தமிழ் முன்னேற்றக்கழகம் | — 02 |
| ★ தி. மு. க | — 01 |
| ★ மார்க்ஸிஸ கம்யூனிஸ்ட் | — 01 |
| ★ இந்திய கம்யூனிஸ்ட் | — 01 |
| ★ பாட்டாளி மக்கள் கட்சி | — 01 |
| ★ ஜனதா தள் | — 01 |
| ★ சுயேச்சை | — 01 |

## பாண்டிச்சேரி முடிவுகள்

பாண்டிச்சேரி யூனியன் பிரதேச சட்டசபைத் தேர்தலில் கட்சிகள் பெற்ற ஆசனங்களின் விவரம் வருமாறு:

| | |
|---|---|
| மொத்தஆசனங்கள் | — 30 |
| ★ இந்திரா காங்கிரஸ் - அ. தி. மு. க. கூட்டணி | — 21 |
| ★ தி. மு. க. | — 04 |
| ★ ஜனதா தள் | — 01 |
| ★ கம்யூனிஸ்ட் கட்சி | — 01 |
| ★ சுயேச்சை | — 03 |

## ஆசிரியர் கொலையாவதை கண்டித்து இன்று பேரணி

யாழ்ப்பாணம், ஜூன் 18
ஆசிரியர்கள் படையினரால் கைது செய்யப்படுதல், கொக்கட்டிச்சோலை, வங்காலை சம்பவங்களில் ஆசிரியர்கள் கொலை செய்யப்பட்டமை ஆகியவற்றைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை ஆசிரிய கலாசாலை மாணவர்கள் இன்று நடத்துகின்றனா.

பலாலி, கோப்பாய் ஆசிரிய கலாசாலை மாணவர்கள் திருநெல்வேலியில் உள்ள பலாலி ஆசிரிய கலாசாலையில் இன்று காலை 9 மணிக்ல கூடி செயலகம் நோக்கி பேரணியாகச் செல்வர்.

பேரணி முடிவில் அரச அதிபர், கல்விப்பணிப்பாளர், செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுப் பிரதிநிதிகள் ஆகியோரிடம் மகஜர்கள் கையளிக்கப்படும். [அ-3]

## 18 வேங்கைகள்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
லெப்டினன்ட் ஜெராட் (சரவணமுத்து ஸ்ரீஸ்கந்தராஜா - உசன்).

2 ஆம் லெப்டினன்ட் ரவி (நடராசா கணேஷ் - காங்கேசன்துறை), 2 ஆம் லெப்டினன்ட் நிசாந்தன் (மாணிக்கராசா ஜெயராசா - சாவகச்சேரி), ஜூடி (இராசசேகரன் டியூக் - குருநகர்), மடத்தின் (ஆறுமுகம் சித்திரவேல் - மன்னார்), வல்லவன் (கதிர்காமத்தம்பி ரவி - மன்னார்) ஜிம்கெலி (பா. இராசசிங்கம் - மன்னார்), ஜெயதாஸ் (புலிகளின் தீவிர ஆதரவாளர்).

கடந்த 14 ஆம் திகதி பூவரசங்குளம் பகுதி மோதலில் பிரேமன் (திசவீரசிங்கம் தபேந்திரன் - கனகராயன் குளம்), ராஜு (பொன்னுத்துரை கிரிதரன் - நாவற்குழி) ஆகியோர் வீரமரணம் அடைந்தனர்.

இதேசமயம்—
செங்கலடிப்புலவு இராணுவ முகாமிலிருந்து அரை மைல் தூரத்தில் விடுதலைப் புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் நடந்த சண்டையில் நான்கு போராளிகள் வீரமரணமடைந்தனர். இராணுவத்துக்கு பலத்த சேதம் ஏற்பட்டது.

போராளிகளான லெப்டினன்ட் சுதா [நாகேந்திரன் - வவுனியா], இரண்டாம் லெப்டினன்ட் ராமன் (பவன் கிருஷ்ணமூர்த்தி - ஓமந்தை], குணாளன் [சுந்தரம் ரவிச்சந்திரன் - மடுக்குளம்], கபில்ரத் [இராமசாமி ஜோன் ஜேக்கப் ஜஸ்ரின் - பாவற்குளம்) ஆகியோரே வீரமரணமடைந்தனர் (உ-3)


## மரண அறிவித்தல்

### சபாரத்தினம் தர்மராஜா

அராலி வடக்கை பிறப்பிடமாகக் கொண்டவரும் சண்டிலிப்பாய் வடக்கை வசிப்பிடமாகக் கொண்டவருமான சபாரத்தினம் தர்மராஜா அவர்கள் 17-6-91 [திங்கட்கிழமை] காலமானார்.

இவர் காலஞ்சென்ற மகாலட்சுமியின் அன்புக் கணவரும், ஜெயலட்சுமி, மனோகரி, யோகேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், குகபாஸ்கர் [Bank Of Ceylon Jaffna], மகேந்திரன், ஜெயந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும், அஜந்தன், அமலன், கார்த்திகன் ஆகியோரின் அருமைப் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று [18-6-91] மாலை சண்டிலிப்பாய் இந்து மயானத்தில் நடைபெறும். இத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி மகேந்திரன் [மகள்]
சண்டிலிப்பாய் வடக்கு,
சண்டிலிப்பாய்.
[17219]



ENGLISH TEACHERS SELECTION EXAMINATION

(உதவி ஆங்கில ஆசிரியர் தெரிவுப் பரீட்சை)

துரித போதனை ஆரம்பம்:- 19 - 06 - 91
புதன் மு. ப. 9. 00 மணி

ஆசிரியர்: திரு. த. ந. பஞ்சாட்சரம்

குகன் கல்வி நிறுவனம்
ஆவரங்கால்.
(17218)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேசன் [[illegible]] லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 202/3 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 18-06- 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org